# இரட்டைக் காப்பியத்தில் கிளைக்கதைகள் - ஒப்பீடு

**முனைவர் விமலா அண்ணாதுரை,**
**தமிழ்த்துறைத்தலைவர்,**
**செல்லம்மாள் மகளிர் கல்லூரி,**
**கிண்டி, சென்னை — 32**

*ஒரு காப்பியத்திற்குக் கதை எத்துணை தேவையோ... அத்தனை தேவை அதில் இடம்பெறும் கிளைக்கதைக்கும், கதைச்சொல்லிக்கும் உண்டு. இதனையே கதையமைப்பு - (காப்பியப் புனைதிறன்., தமிழ்ப் பதிப்பகம், சென்னை - 20., 1979) என்கிறார் டாக்டர். ச.வே.சு. காப்பியமும் காப்பியத்தினூடான கதைப்போக்கும் எழுச்சியுடனும், விறுவிறுப்புடனும் செல்வதற்குஇவ்வமைப்பு நிலை துணைபுரிகிறது.*

*காப்பியத்தில் நிகழ்ச்சிகளின் கோர்வையே கதையை ஆக்குகின்றன என்றால், அதில் இடம்பெறும் கிளைக்கதைகள் அக்கதையை நிலைநிறுத்தி - அதனிடையே ஊடுபொருளாகி அதற்குறிய அமைப்பை அதற்கு அளிக்கின்றன. எப்பொழுதும் முன்பின் ஏற்றத்தாழ்வற்ற கதை என்பது, அக்கதை இடம்பெறும் இலக்கியத்திற்கு வன்மையான அமைப்பை கொடுக்காது. எனவே ஒரு கதை காப்பிய அமைப்பாக பொருந்த வேண்டுமானால், அக்கதையில் திருப்பங்களும், சிக்கல்களும் இன்றியமையாதனவாகின்றன. பொதுவாக வெகுசன வாழ்வில் தனிமனிதனுக்கு இயல்பாகத் தோன்றும் பொருளை/நிகழ்ச்சியைக் காட்டிலும், ஒருவித வியப்போடும், கவர்ச்சியோடும் தோன்றும் முரண்பட்ட காட்சி அல்லது நிகழ்ச்சி வாசிப்பாளனை ஒருவித பிணிப்புக்கு இழுத்துச் சென்று, கதையோடு ஒன்றச்செய்கிறது. இத்தகைய வாசகனின் ஆர்வம் காப்பியத்துக்குள் கதையமைப்பால் ஏற்படுத்தப்படுவது குறிப்பிட்த்தக்கது.*

*காப்பியங்களிலும் சரி, நாவல்களிலும் சரி,இன்னொரு கவனிக்கவேண்டிய விஷயம், அதில்வரும் கதைச்சொல்லி எப்பொழுதும் ஒரு கதைக் குரலாக மட்டுமின்றி, பல கதைகளின் குரலாக அமைவது, அல்லது அமைக்கப்படுவது. இந்த பலகுரல் கதைசொல்லும் நிகழ்வே வாசகனைக் கதையுலகத்துக்குள் இறக்கிவிட அவசியமானதாகும்.*

**கிளைக்கதைகளின் தேவை**

*காப்பியங்களில் இன்றியமையாத இடம்பெற்றுள்ள கிளைக்கதைகள் பல்வேறு நோக்கங்களில் அமைந்துள்ளன. இக்கிளைக்கதைகள் காப்பியக் கதையோடு அமைந்துள்ளன. இவை காப்பியப் பாத்திரங்களின் பண்பை உயர்த்திக் காட்டல். தாம் கொண்ட கொள்கையினை நிறைவேற்றி கொள்ளுதல். ஊர். நகரம் மற்றும் நாடு ஆகியவற்றின் சிறப்புக்களைக் கூறுதல். காப்பிய மாந்தர்களை அறிமுகப்படுத்துதல். பாத்திரங்களின் மேன்மையை உணர்த்துதல். கதைப்போக்கினை தெளிவுறத்துதல் என பல்வேறு இடங்களில் காப்பியக்கதையின் நிகழ்விற்கேற்ப இடம்பெற்றுள்ளன.*

### இரட்டைக் காப்பியங்கள்

இரட்டை காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தமக்குள் சொல். அடி. நிகழ்ச்சி பாத்திர ஒற்றுமை. பாடுபொருள் போன்றவற்றில் தொடர்பு கொண்டிருப்பதுடன். கிளைக்கதைகளை எடுத்தாள்வதிலும் தம்முள் தொடர்பும் வேற்றுமைகளையும் கொண்டுள்ளன. தமிழின் முதல் இரு காப்பியங்களான சிலப்பதிகாரமும். மணிமேகலையம் பின் எழுந்த காப்பியங்களைக் காட்டிலும் அளவில் மிகச்சிறியவை. ஆனால் அவிவிரு காப்பியங்களுமே. பின் எழுந்த காப்பியங்களைக் காட்டிலும் (சிந்தாமணி. பெருங்கதை) கிளைக்கதைகளை அதிக அளவு எடுத்தாண்டுள்ளன.

கிளைக்கதைகளைக் காப்பிய உத்தியாக எல்லாக் காப்பியப் புலவர்களும் பயன்படுத்தியுள்ளனர். இளங்கோவடிகளும் சாத்தனாரும் இவ்வுத்தியை காப்பியம் முழுவதிலும் பயன்படுத்தியுள்ளனர். இரட்டைக் காப்பியப் புலவர்களான இவ்விருவரும் இவ்வுத்தியை கையாள்வதில் சில இடங்களில் ஒன்றுபட்டும், பல இடங்களில் வேறுபட்டும் உள்ளனர். இதற்கு காரணம் இருவரின் தனித்துவம், கதைக்களம், சமயம், புலமைநுட்பம், காப்பியப் பாடுபொருள் போன்றவை. கிளைக்கதைகள் காப்பியத்திற்குள் வரும்போது, படிப்பவர்களுக்கு திணிக்கப்பெற்ற உணர்வைத் தரக்கூடாது. இயல்பாக காப்பியத்துடன் ஒன்றுதல் வேண்டும். அடிகளும் சாத்தனாரும் கிளைக்கதைப் படைப்பில் இம்முறையை நன்கு பின்பற்றியுள்ளனர் எனலாம். கிளைக்கதைகள் இக்காப்பியங்களில்அதன் ஓட்டத்திற்கோ. பாத்திரத்திற்கோ பயன்படும் விதத்தில் உவமைகளாக, வர்ணனைகளாக, எடுத்துக்காட்டுகளாக-பின்னணியை விளக்க என பல்வேறு நிலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள்

சிலப்பதிகாரத்தில் நாளங்காடி பூதக்கதை, ஊர்வசி சாப வரலாறு, தேவந்தி. கிளைக்கதை, மாடலன் கூறும் கோவலன் கதை, குரங்குக்கை வானவன் கதை, அரண்மனையில்திருட்டு, பொற்கைப்பாண்டியன்கதை, சிபி மன்னர் வரலாறு, மனுகதை, திருப்பாற்கடல் கடைந்த வரலாறு, கண்ணன் குருத்த மரத்தை ஒடித்தது, கண்ணன்தூது, வாமனஅவதாரம், பராசுரன்கதை, கோவலன் முற்பிறப்பு கதை, கண்ணகிக் கதை,மணிமேகலை துறவுபூண்ட கதை, கோவலன் கண்ணகி தாய்மார்களின் முற்பிறப்பு கதை, இளங்கோ அரசு துறந்த வரலாறு, சாப விமோசன கதை, கோவலன் முன்னோர் கதை ,நீதிநெறி கதை போன்றவை குறிப்படத்தக்கன .

### மணிமேகலையில் கிளைக்கதைகள்

மணிமேகலையில் சுதமதிக்கதை. சக்கரவாளக் கோட்டக் கதை. மணிமேகலை. சுதமதி. மாதவி முற்பிறப்புக் கதை, விசுவாமித்திரர், ஆபுத்திரன், ஆதிரை, சாதுவன், கந்திப்பாவை, மருதி, விசாகை, தருமதத்தன். போன்றோரின் கதைகள். காயசண்டிகை வரலாறு. உதயகுமாரணின் முற்பிறவி. பீலிவளை நெடுமுடிக்கிள்ளி வரலாறு போன்றவை குறிப்பிடத்தக்கவை.

### ஒப்பீடு

1) சிலப்பதிகாரம். மணிமேகலை இரண்டுமே முற்பிறப்புக் கதையை எடுத்தாள்கின்றன. சிலப்பதிகாரத்தில் ஒரே ஒரு முற்பிறப்பு கதை காப்பிய ஓட்டத் தெளிவிற்காகப்

பயன்படுத்தப்பட்டுள்ளது.ஆனால்மணிமேகலையில் மணிமேகலை முற்பிறப்பு கதைகள் 2 பாகம்.சுதமதி மாதவி முற்பிறப்பு கதை.உதயணகுமாரனின் முற்பிறப்பு கதை.கோவலன்கண்ணகியின் முற்பிறப்பு கதை என்ற 5 முற்பிறப்புக் கதைகளை. சாத்தனார் எடுத்தாண்டுள்ளார்.இவர் அக்கதைகளை காப்பிய ஓட்டத் தெளிவிற்காகப் பயன்படுத்தியுள்ளார் என்பதைக் காட்டிலும். இக்கதைகள் மூலம் பௌத்தர்களின் முற்பிறப்புக் கொள்கையை எடுத்துக் காட்டியுள்ளார் என்பதே பொருந்தும்.

2) சிலப்பதிகாரத்தில் உள்ள கதைகளில் ஒரே ஒரு கதை மட்டும் காப்பியப் புலவரால் சொல்லப்பட்டுள்ளது. (தேவந்தி கதை) மணிமேகலையில் அங்ஙனம் இல்லை.

3) மணிமேகலையில் ஆபுத்திரன் கதை மூன்று காதைகளில் ஒரு சிறு காப்பியம் போலவே பின்னப்பட்டுள்ளது.சிலம்பில் இவ்வாறு. இல்லை. ஏனெனில் இளங்கோவடிகள் மையக்கதைப் படைப்பிற்கே முதலிடம் கொடுத்துள்ளார் எனலாம்.

4) மணிமேகலையில் கிளைக்கதை மாந்தர் பெயரிலேயே. சில காதை தலைப்புகளே அமைந்துள்ளன.(ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை.ஆதிரை பிச்சையிட்ட காதை.கந்திற் பாவை வருவதுரைத்த காதை.ஆபுத்திரன் நாடு அடைந்த காதை.ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை.சக்கரவாளக்கோட்டம் உரைத்த காதை ஆகியன)சிலப்பதிகாரத்தில் அவ்வாறு இல்லை.

5) கோவலன் முன்னோர்களின் வரலாறு சிலப்பதிகாரம் .மணிமேகலை இரண்டிலுமே கிளைக்கதையாக உள்ளது.ஆனால் இவ்வரலாறு மணிமேகலையில் தனி கிளைக்கதையாகவும் . சிலப்பதிகாரத்தில். மாடலன் கூறும் மூன்று கிளைக்கதைகளில் முதற்கதையின் ஒரு சிறுபகுதியாகவும் அமைந்துள்ளது.

6) பௌத்த மதக் கொள்கைகளைப் பேச. கிளைக்கதைகளைப் பயன்படுத்திக் கொண்டதைப் போல பிற மத எதிர்ப்பைக் காட்டவும் சாத்தனார் சுதமதி பிறந்த கதை. சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதை .ஆபுத்திரன் கதை. விசாகை தருமதத்தன் போன்றோர் கிளைக்கதைகளைப் பயன்படுத்திக்கொண்டார்.இளங்கோவடிகளிடம் அத்தகைய போக்கு இல்லை.

7) இவ்விரு காப்பிய ஆசிரியர்களும் பிற நூல் கதைகளை தங்களது காப்பியங்களில் எடுத்தாண்டுள்ளனர். சிலப்பதிகாரத்தில் மாடலன் கூறும் கோவலன் பற்றிய மூன்று கதைகளில் முதல் கதையின் பகுதியாக வரும் கீரிபிள்ளை கதை பஞ்ச தந்திர கதைகளில் ஒன்றாகும்.அதேபோல் சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதையில் வரும் கோதமி வரலாறு புத்த ஜாதகக்கதையில் வரும் கௌதமி வரலாறு ஆகும்.

8) சிலப்பதிகாரத்தில் ஊர்ப்பெருமை பேசும் பொருட்டு நாளங்காடி பூக்கதையும்.பாத்திரத்தின் பெருமை உணர்த்த ஊர்வசி சாப வரலாற்று கதையும் அடிகள் எடுத்தாண்டுள்ளார். ஆனால் மணிமேகலையில் இத்தன்மையுடைய கதைகள் இல்லை.

9) சிலப்பதிகாரம்.மணிமேகலை இரண்டிலுமே ஒன்றிய கிளைக்கதைகள் ஒன்று மட்டுமே காணப்படுகிறது.ஒன்றிய கிளைக்கதை என்பது மையக்கதையின் ஓட்டத்தை திசை திருப்பும்.சான்று;சிலப்பதிகாரத்தில் பொற்கொல்லன் கூறும் கதை கண்ணகியின் வாழ்வினையும்.மணிமேகலையில் ஆபுத்திரன் கதை மணிமேகலையின் வாழ்க்கைப் போக்கினையும் மாற்றியது.

10) சிலப்பதிகாரம்.மணிமேகலை இரண்டிலுமே வரலாற்றுக்கதைகள் கிளைக்கதைகளாக எடுத்தாளப்பட்டுள்ளன.சிலப்பதிகாரத்தில் பாண்டியன் பற்றிய வரலாற்றுக்கதைகளும் மணிமேகலையில் சொழன் பற்றிய வரலாற்றுக் கதைகளும் இடம்பெற்றுள்ளன.

11) சிலப்பதிகாரத்தில் அடிகள் ஒரே கிளைக்கதையை இருவேறு நோக்கில் எடுத்தாண்டுள்ள போக்கை மணிமேகலையில் மட்டுமல்ல வேறு எந்த தமிழ்க்காப்பியத்திலும் காணமுடியாது.தேவந்தி கதை புகார் காண்டத்திலும் .வஞ்சிக்காண்டத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

12) ஒருவருடைய வாழ்க்கை கதையை இருவேறு பகுதியாக்கி இருவேறு நோக்கில் இருவேறு கிளைக்கதையாகப் படைத்துள்ள தன்மை மணிமேகலையில் அன்றி வேறு எந்த தமிழ்க்காப்பியத்திலும் காணமுடியாது.(சுதமதி கதை முற்பகுதி மற்றும் பிற்பகுதி என்று இரண்டு கதைகள்)

13) சிலப்பதிகாரத்தில் பயின்று வந்த நாளங்காடி பூதக்கதை.திருமகள் கொல்லிப்பாவை உருவெடுத்தது.அகத்தியர் சாபம்.தூங்கெயில் எறிந்த தொடிதோட்செம்பியன் கதை.கரிகால் வளவனின் வடதிசைப் போர்.போன்ற கதைகள் மணிமேகலையிலும் பயின்று வந்துள்ளன.ஆனால் வரும் முறையில் சிலப்பதிகாரத்தில் இருந்து மாறுபட்டுள்ளது.

14) சிலப்பதிகாரத்தில் .சிபி மன்னர் வரலாறு.மனு கதை.திருப்பாற்கடல் கடைந்த வரலாறு.கண்ணன் குருந்த மரத்தை ஒடித்தது.கண்ணன் தூது.வாமன அவதாரம் போன்றவை திரும்ப திரும்ப எடுத்தாளப்படுகின்றன.மணிமேகலையில் கவேரன் தவம் இருந்த வரலாறு ஒன்றுதான் திரும்ப எடுத்தாளப்பட்டுள்ளது.

15) சிலப்பதிகாரத்தில் புராணக்கதைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய் எடுத்தாளப்பட்டுள்ளன.அதனால்.அவற்றை வகைப்படுத்திக்காண முடிந்தது.மணிமேகலையில் புராணத் துணைக்கதைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய் எடுத்துக் காட்டப்படவில்லை.

இரட்டைக் காப்பியங்களில் காணப்பெறும் கிளைக்கதைகள் காப்பிய சுவைக்கு மட்டுமின்றி ஆசிரியர்களின் காப்பிய புலமையையும்.காப்பியங்கள் உருவான காலத்தை அறிந்துகொள்ளவும் துணைநிற்கின்றன.

பயன்பட்ட நூல்கள்;


1. காப்பிய புனைதிறன்- ச.வே.சுப்ரமணியன்.சென்னை.தமிழ்ப் பதிப்பகம்.1979.
2. தமிழ் இலக்கிய சரிதத்தில் காவியகாலம் - எஸ்.வையாபுரிப்பிள்ளை.சென்னை.தமிழ்ப்புத்தகாலயம்.
3. குடிமக்கள் காப்பியம்.தெ.பொமீனாட்சி சுந்தரனார்.மதுரை மீனாட்சி புத்தக நிலையம்.1975
4. மணிமேகலையில் காப்பியக்கூறுகள்.மங்களவதி கேப்ரியேல்.மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.1977-1978.
5. சிலம்பில் துணைப்பாத்திரங்கள்.கா.மீனாட்சி சுந்தரனார்.புழனி.இளங்கோ வெளியீடு.1975